**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**அ.வ.எண். 237/2018**

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்கள் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அசோகன் | | |
| த/பெ. | சம்பந்தம் | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | வடக்குப்பட்டு | வயது | 61 |
| தொழில் | விவசாயம் | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2 ம் வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தயும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். என் தரப்பு ஆவணங்களாக வா.சா.ஆ 1 முதல் 10 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| வா.சா.ஆ. 1 | 28.10.1966 தேதியிட்ட திருமதி.சுப்பம்மாள் பெயரிலுள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ. 2 | 15.12.2004 தேதியிட்ட சம்பந்தம் மற்றும் துரை ஆகியோர்களால் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் |

| | |
|---|---|
| | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ. 3 | 27.07.2007 தேதியிட்ட திரு.சம்பந்தம் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ. 4 | 14.03.2018 தேதியிட்ட திருமதி. சுப்பம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ. 5 | 05.09.2018 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் இணையவழி நகல் |
| வா.சா.ஆ. 6 | 05.09.2018 தேதியிட்ட திரு.சம்பந்தம் அவர்களின் பெய்ரிலுள்ள பட்டா எண்.129 இணையவழி நகல் |
| வா.சா.ஆ. 7 | 05.09.2018 தேதியிட்ட பிரதிவாதிகளின் பெயரிலுள்ள பட்டா எண்.1216 இணையவழி நகல் |
| வா.சா.ஆ. 8 | மின் இணைப்பு அட்டை அசல் |
| வா.சா.ஆ. 9 | கிஸ்து ரசீது அசல் |
| வா.சா.ஆ. 10 | சந்தை மதிப்பு இணையவழி நகல் |

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.